ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

2412/08 - 2024 නොවැම්බර් මස 25 වැනි සඳුදා - 2024.11.25

2412/08 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 25 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசிலமைப்பு

### அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (1) ஆம் உப உறுப்புரையின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால் அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கையையும் அமைச்சுக்களின் எண்ணிக்கையையும் அத்தகைய அமைச்சர்களுக்குரிய விடயங்கள் மற்றும் பணிகள், திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் ஆகியவற்றைச் சாட்டுதல் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாதலால்,

பல்வேறு அமைச்சர்களின் பொறுப்பிலுள்ள விடயங்கள், பணிகள், திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் என்பன இந்த அறிவித்தல் திகதியிலிருந்து, இங்கு கீழ் தரப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பெற்றவாறு அமைந்துள்ளனவென்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அநுர குமார திசாநாயக்க,
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2024, நவெம்பர் 25.

1A - G 43127 — 364 (2024/11)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

அட்டவணை (தொடர்ச்சி)

07. மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| விடயங்களும் பணிகளும் | திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள் |
| 1. மகளிர் மற்றும் சிறுவர் விவகாரங்கள் விடயங்களுடனும் மற்றும் அரசாங்கத்தால் செயற்படுத்தப்பட்ட தேசிய கொள்கைகளின் அடிப்படையில் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற அந்த விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும், செயற்படுத்துதலும், கண்காணித்தலும் மற்றும் மதிப்பிடுதலும்.<br>2. அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற உரிய பொதுச் சேவைகளை வினைத்திறனுடனும் மனிதநேயரீதியிலும் வழங்குதல்.<br>3. ஊழலும், வீண்விரயமும் இல்லாதொழிக்கப்படுகின்ற அதேவேளை, அமைச்சின் பணிகள் நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்தி, நவீன முகாமைத்துவ நுணுக்கங்களையும் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி அனைத்து முறைமைகளையும் நடைமுறைகளையும் மறுசீரமைத்தல்.<br>4. மகளிர் சாசனத்தைச் செயற்படுத்துதல்<br>5. அரசாங்க அலுவல்களின்போது தீர்மானங்களை எடுத்தலும் அரசியல் துறையினுள் பெண்களின் பங்கேற்பையும் பிரதிநிதித்துவத்தையும் அதிகரிப்பதற்காக உபாயமுறைகளைத் தயாரித்தலும் செயற்படுத்துதலும்<br>6. மோதல்களினாலும் வறுமையினாலும் பாதிப்புக்குள்ளான பெண்களை வலுப்படுத்தத் தேவையான நடவடிக்கை எடுத்தல்<br>7. மகளிர் மற்றும் சிறுவர் துன்புறுத்தலைத் தவிர்ப்பதற்கான சட்டங்களையும் கொள்கைகளையும் வலுப்படுத்துதலும் செயற்படுத்தலும்<br>8. பால்நிலை மற்றும் ஆண், பெண் எனச் சமூகரீதியில் வேறுபடுத்திக் கருதுவதைத் தடுப்பதற்காக தற்போதுள்ள சட்டங்களைத் திருத்தம்செய்து புதிய சட்டங்கள் மற்றும் கொள்கைகளை வகுத்தலும் செயற்படுத்துதலும்<br>9. மகளிரை அடிப்படையாகக் கொண்ட வீட்டு அலகினைப் பலப்படுத்துவதற்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தல் மற்றும் செயற்படுத்துதல் | 1. மகளிர் தொடர்பான தேசிய குழு<br>2. இலங்கை மகளிர் பணியகம்<br>3. நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களம்<br>4. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை<br>5. முன் சிறுவர் அபிவிருத்தி பற்றிய தேசிய செயலகம்<br>6. தேசிய சிறுவர் பாதுகாப்பு நம்பிக்கை நிதியம் | • 2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க வீட்டு வன்முறைகள் தவிர்ப்புச் சட்டம்<br>• 2024 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க பெண்களை வலுவூட்டும் சட்டம்<br>• 1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டம்<br>• 1941 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க சிறுவர் மகவேற்புக் கட்டளைச் சட்டம்<br>• 1939 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க சிறுவர், இளம் ஆட்கள் கட்டளைச் சட்டம்<br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம், II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டவாக்கங்களும் |

அட்டவணை (தொடர்ச்சி)

07. மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் (தொடர்ச்சி)

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| விடயங்களும் பணிகளும் | திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள் |
| 10. மகளிர் மற்றும் சிறுவர் நடவடிக்கைகளுக்குரிய நிலைபேறான அபிவிருத்தி அபிலாசைகளை நிறைவேற்றல்<br>11. அரசியல் கட்டமைப்பில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை குறைந்தபட்சம் 50 சதவீதம் வரை அதிகரிப்பதற்குத் தேவையான சட்டங்கள் மற்றும் கொள்கைகளை அறிமுகப்படுத்ததல்<br>12. தேவையான வரிச்சலுகை, நிதி மற்றும் ஏனைய வசதிகளை வழங்கி பொருளாதா ரீதியில் வறுமையை ஒழிக்கப் போராடுதல்<br>13. பெண்களின் சம்பளம் பெறாத பராமரிப்பு ஊழியத்தின் சுமையை குறைத்தல்.<br>14. உடல், உள ரீதியான ஆரோக்கியமுள்ள பிள்ளைகளை உருவாக்கும் நோக்குடன் முன் சிறுவர்பராய பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் வகுத்தமைத்தல்<br>15. பாதுகாப்பற்ற நிலையிலுள்ள சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சர்வதேச நியமங்களுக்கு இயைபானவாறு நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் விருத்தி செய்தலும், செயற்படுத்தலும்<br>16. சிறுவர் பட்டயத்தை நடைமுறைப்படுத்துதல்<br>17. சிறுவர் பாதுகாப்பு நிலையத்தின் ஒழுங்குறுத்துகை<br>18. செவண சரண ஆதரிப்புப் பெற்றோர் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்<br>19. விசேட திறமைகளுடைய சிறுவர்களின் ஆற்றலை மேம்படுத்துவதற்கான நிதி உதவியினை வழங்குதல்<br>20. பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு பாகுபாடு காட்டும் மற்றும் துன்புறுத்தல் தொடர்பான விசேட சட்டங்களை மறுசீரமைத்தல்<br>21. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற ஏனைய அனைத்து விடயங்கள்.<br>22. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள் எல்லா நிறுவனங்களையும் மேற்பார்வையிடுதல் | | |